**Ministry of Education**
Minister
315 Front Street West
Toronto ON  M7A 0B8

**Ministère de l'Éducation**
Ministre
315, rue Front Ouest
Toronto ON  M7A 0B8

Ontario

ஜூலை 30, 2020

அன்பான பெற்றோரே,

COVID-19க்கான வைரசுக்கு எதிராகத் தொடர்ந்து இந்த மாகாணம் போராடும் அதேவேளையில் நீங்களும், உங்களின் குடும்பத்தவர்களும் தொடர்ந்தும் ஆரோக்கியமாகவும் திடமாகவும் இருக்கிறீர்கள் என நான் நம்புகிறேன்.

மாணவர்கள், குடும்பத்தவர்கள் மற்றும் அவர்கள் வாழும் மற்றும் பணிபுரியும் சமூகத்தவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக பாடசாலைகளை மூடும் அரசாங்கத்தின் தீர்மானம் பற்றி உங்களுக்கு நான் கடிதம் எழுதி நான்கு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இந்த நான்கு மாதங்களில் நிறைய மாற்றங்கள் நடந்துவிட்டன. இருப்பினும், எங்களின் சமூகத்தவர்களையும் மாகாணத்தவர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான பெற்றோர், மாணவர்கள் மற்றும் குடும்பத்தவர்களின் ஒன்றிணைந்த முயற்சி மாறாமல் இருக்கிறது.

மாகாணம் முழுவதிலும் உள்ள பொதுச் சுகாதார நிலைமை நிச்சயமாக மாறியுள்ளது, சமீபத்திய வாரங்களில் புதிய தொற்றுக்களின் அளவு குறைந்திருக்கிறது என்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். COVID-19 பரவியதிலிருந்து, உங்களின் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதும், அதன் விரிவாக்கமாக உங்களையும், உங்களின் சமூகத்தவர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதுமே நாங்கள் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையினதும் அடிப்படைக் கொள்கையாக இருந்தது.  நிச்சயமாக, இதில் எங்கள் எல்லோருக்குமே பங்கிருக்கிறது.

Hospital for Sick Childrenஇன் ஆரோக்கியத்துக்கான தலைமை மருத்துவ அதிகாரி, மற்றும் COVID-19 Command Table (கட்டளைப் பணிப்பு) உள்ளடங்கலாக - கனடாவின் முன்னணி மருத்துவ மற்றும் விஞ்ஞான நிபுணர்களின் ஆலோசனையைப் பின்பற்றி –- செப்ரெம்பர் மாதத்தில் மாகாணம் முழுவதிலும் உள்ள மாணவர்கள் பாதுகாப்பாக வகுப்பிற்கு திரும்ப அனுமதிக்கும் வழிகாட்டல்களை வழங்கும் திட்டத்தை நாங்கள் இன்று வெளியிட்டோம். இவை உள்ளடக்குபவை:

- அரச நிதியளிக்கப்படும் ஆரம்பப் பாடசாலைகள் அனைத்தையும் வாரத்தில் ஐந்து நாட்கள் முழுமையாக திறத்தல்;
- அபாயம் குறைந்த சமூகங்களில் உள்ளவற்றை வாரத்தில் ஐந்து நாட்கள் மீளத்திறப்பதுடன், பெரும்பாலான இரண்டாம்தரப் பாடசாலைகளைத் தழுவப்பட்ட ஒரு மாதிரியுடன் மீளத் திறப்பதற்கு அனுமதித்தல், மற்றும்;
- வகுப்பு அல்லது இணையக் கற்றலுக்கான தெரிவு உங்களுக்கு இருப்பதையும், ஆண்டு முழுவதும் அந்த முடிவை மாற்றுவதற்கான வாய்ப்பு இருப்பதையும் உறுதிசெய்தல்.

எங்களின் பிள்ளைகளை மீளவும் எங்களின் பாடசாலைகளுக்கு நாங்கள் திரும்ப அனுப்ப வேண்டுமென்று கிடைத்திருக்கும் சிறந்த மருத்துவ ஆலோசனை கூறுகிறது. ஒன்ராறியோ

…/2

மாணவர்களில் COVID-19 ஆழமானதொரு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.

உங்களின் பிள்ளைகள் முடிந்தவரையில் பாதுகாப்பாகவும் ஆதரவுகளுடனும் இருப்பதை உறுதிசெய்வதற்காக, மிகச் சிறப்பான புதிய ஆதரவுகள் மற்றும் ஆதாரவளங்களுடன் அவர்களை வகுப்பறைக்குள் மீண்டும் கொண்டுவரும் எங்களின் திட்டத்தை இன்று சற்று முன்னதாக மாகாண முதல்வரும் நானும் வெளியிட்டோம்.

முகக்கவசங்கள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதற்கும், கற்பிப்பதற்காகப் புதியவர்களைச் சேர்ப்பதற்கும், சுத்தம்செய்வதற்கு மேம்பட்ட பொருட்களை வழங்குவதற்கும், பாடசாலைகள் மற்றும் பாடசாலைப் பேருந்துகளுக்கு அதிகளவிலான பணியாளர்களை வேலைக்கமர்த்துவதற்கும், பணியாளர்கள் அனைவருக்கும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தொழில்முறை மேம்பாட்டிற்கும் 300 மில்லியனுக்கும் அதிகமான தொகையை அரசாங்கம் வழங்குகிறது.

மேலும், எங்களுடைய பாடசாலைகளில் மேம்படுத்தப்பட்ட ஆபத்து மதிப்பீடு, நோயறிதல் பரிசோதனை மற்றும் மருத்துவ ஆதரவுகளுக்கு ஆதரவு வழங்குவதற்காக, தொற்றுக்கான ஆபத்துகள் அதிகமாகவுள்ள பிராந்தியங்களில் சேவையாற்றுவதற்காக 500 பொதுச் சுகாதார செவிலியர்களைக் கொண்ட தனித்துவமானதொரு நடமாடும் வலையமைப்பை ஒன்ராறியோ வழங்கும். நிறைவாக, எங்களின் எதிர்வினைகளை வலுப்படுத்துவதற்காகவும், ஆபத்தை நன்கு விளங்கிக்கொள்வதற்காகவும் நோய்குறிகளற்ற இரண்டாம்நிலைப் பாடசாலை மாணவர்களில் கண்காணிப்புப் பரிசோதனைகளை ஒன்ராறியோ பொதுச் சுகாதாரம் மேற்கொள்ளும்.

இன்று வெளியிடப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் தொடர்பான முழுத் தொகுப்பு வலுவானதாகவும், மருத்துவ அறிவியல் தகவலறிந்ததாகவும், மாறிவரும் COVID-19 அச்சுறுத்தலுக்கு பதிலளிப்பதற்காக நெகிழ்வானதாகவும் இருக்கின்றது. மாறிக்கொண்டிருக்கும் இந்த வைரசின் யதார்த்தத்திற்கு எதிர்வினையாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதற்கு நான் உங்களுக்கு உத்தரவாதமளிக்கிறேன்.

பின்வருவன பற்றிய தெளிவை வழங்குவதன் மூலம், மாணவர்களை இந்த வழிகாட்டல் பாதுகாப்பாக வைத்திருக்கும்.

- சுய பரிசோதனை
- மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான மேம்பட்ட கைச் சுகாதாரம்;
- 4ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை கட்டாயமாக்கப்பட்ட முகக்கவசங்கள்;
- ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான PPE (தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள்) மற்றும் முகக்கவசம் தேவைப்படும் மாணவர்களுக்காகப் போதுமானளவில் துணியாலான முகக்கவசங்கள்;
- வகுப்பிற்கு வெளியேயான தொடர்புகளைக் குறைப்பதற்காக மாணவர்களைப் பிரிவுகளாகப் பிரித்தலில் (அல்லது குழுவாக்கலில்) தீவிரமாக இருத்தல்;
- தூரத்தைப் பேணல்;
- மேலதிகமாக 900 பாதுகாவலர்களைப் (custodians) பணிக்கமர்த்துவதுடன், பாடசாலைச் சூழல் மற்றும் பேருந்துகளை மேம்படுத்தப்பட்ட வகையில் சுத்தமாக்கல் மற்றும் கிருமிநீக்கம் செய்தல்;
- வருகையாளர்கள் மீதான கட்டுப்பாடுகள்;
- கட்டுப்படுத்தப்பட்ட மீள்திறப்புக்கு உதவுவதற்காக முன்பதிவு.

COVID-19 *பரவலால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை மற்றும் பதற்றங்களின் பின்னர், பல மாதங்கள் கடந்து பாடசாலைக்குத் திரும்பும் மாணவர்களின் மனநலத்தைப் பேணுவதற்கு நாங்கள் தொடர்ந்து முயற்சிப்போம். சபையினர் நேரத்துடனேயே அறிந்து, ஆதரவுகள் தேவைப்படும் மாணவர்களுக்கு அவற்றை வழங்குவதற்காக, இந்த ஆண்டுக்கான நிதியளிப்பில்* 20 *மில்லியனை நாங்கள் மேலதிகமாக முதலிடுகிறோம். மனநலப் பணியாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கான அணுகல் முன்பொருபோதும் இல்லாத அளவில் மாணவர்களுக்குக் கிடைக்கும், அத்துடன் ஒரு சாதனையாக,* 50 *மில்லியனை இந்த ஆண்டு நாங்கள் முதலீடு செய்வோம்.*

*ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில்* 5 *நாட்கள் வகுப்பில் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை உள்ளடங்கலான முக்கியமான ஆதரவுகளைக் கற்றலுக்கான விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு பாடசாலை மீள்ஆரம்பத் திட்டம் வழங்குகிறது. நிலையானதன்மை முக்கியமானது என்பதில் வல்லுநர்கள் தெளிவாக இருக்கின்றனர், அதைத்தான் இந்தப் பிள்ளைகளுக்கு நாங்கள் வழங்குவோம்.*

*ஏற்கனவே நாங்கள் கூறியதுபோல, ஒன்ராறியோ மாணவர்களுக்கான எங்களின் அர்ப்பணிப்பிலிருந்து நாங்கள் ஒருபோதும் விலகமாட்டோம். இந்த ஆண்டில் மட்டுமல்ல, எதிர்காலத்திலும் வெற்றியடைவதற்குத் தயாராக அவர்கள் இருப்பதை, ஒன்றிணைந்து செயல்படுவதன்மூலம்  நாங்கள் உறுதிசெய்ய முடியும்.*

*ஒன்ராறியோ பெற்றோர்களே, செப்ரெம்பர் மாதத்தில் பாடசாலைக்குப் பாதுகாப்பான வருகையை உறுதிசெய்வதற்கான உங்களின் கடின உழைப்பு, உள்ளீடு மற்றும் கூட்டு-அர்ப்பணிப்புக்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.*

*உண்மையுள்ள*

*மதிப்பிற்குரிய Stephen Lecce*
*கல்வி அமைச்சர்*